[திரு. எடப்பாடி கே. பழனிசாமி][*2017 ஜூலை 14*

2. கிராமப்புற பெண் கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ் பயன் பெறும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவியர்களின் பெற்றோர்களது ஆண்டு வருமான உச்சவரம்பு 25,000 ரூபாயிலிருந்து 72,000 ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

6. விதி 110–ன்கீழ் வெளியிடப்படும் அறிவிப்புகளை அரசு உறுதிமொழிக் குழுவிற்கு அனுப்பி வைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், விதி 110–ன்கீழ் ஏராளமான அறிவிப்புகள், வாக்குறுதிகள் மற்றும் உறுதிமொழிகள் இங்கே தொடர்ந்து வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மானியக் கோரிக்கையின்மீதான பதிலுரையின்போது மாண்புமிகு அமைச்சர்கள் ஏற்கெனவே பல உறுதிமொழிகள் மற்றும் வாக்குறுதிகளைத் தந்து கொண்டிருக்கிறார்கள். அதேபோல, கேள்வி நேரத்தின்போது மாண்புமிகு அமைச்சர்கள் பதிலளிக்கும்போது சில விளக்கங்களைச் சொல்லி அந்தத் திட்டங்கள் எப்படி நிறைவேற்றப்படவிருக்கின்றன என்கின்ற நிலைகளையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், கேள்வி நேரங்களின்போது தெரிவிக்கப்படும் பதில்கள் மற்றும் மானியக் கோரிக்கையின்மீதான பதிலுரையின்போது மாண்புமிகு அமைச்சர்களால் வழங்கப்படும் உறுதிமொழிகள் மற்றும் வாக்குறுதிகள் அனைத்தும் முறையாக அரசு உறுதிமொழிக் குழுவிற்கு (Assurance Committee) அனுப்பி வைக்கப்படுகின்றன.*

ஆனால், விதி 110–ன்கீழ் வெளியிடப்படும் உறுதிமொழிகள், வாக்குறுதிகள் மற்றும் அறிவிப்புகள் அரசு உறுதிமொழிக் குழுவிற்கு அனுப்பப்படுவதில்லை. விதி 110–ன்கீழ் அறிவிக்கப்படும் அறிவிப்புகளின் நிலைகளையெல்லாம் ஒரு வெள்ளை அறிக்கையாக இந்த அவையில் வைக்கவேண்டுமென்று நான் ஏற்கெனவே பலமுறை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன். ஆகவே, நான் கேட்க விரும்புவது, வெள்ளை அறிக்கை வைப்பதற்கு முன்வரவில்லையென்றாலும், அரசு உறுதிமொழிக்

குழுவிற்காவது இந்த அறிவிப்புகளையெல்லாம் அனுப்பி வைக்க இந்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஏற்கெனவே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் விதி 110—ன்கீழ் எத்தனை அறிவிப்புகள் வெளியிடப்பட்டன, அதில் எத்தனை அறிவிப்புகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன, எத்தனை அறிவிப்புகள் நிறைவேற்றப்படவில்லை என்பது குறித்து கேட்டார். அதுகுறித்து, அன்றே நான் விளக்கமாகத் தெரிவித்துவிட்டேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் விதி 110—ன்கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என்பதை மீண்டும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நான் ஏற்கெனவே தெரிவித்ததைப்போல, ஏதாவது ஒரு காரணம், அதாவது நிலம் எடுப்புப் பணியில் ஏதாவது பிரச்சினை இருக்கலாம், நீதிமன்றத்தில் ஏதாவது வழக்கு நிலுவையில் இருக்கலாம் அல்லது மத்திய அரசிடமிருந்து நாம் அனுமதி ஏதாவது பெற வேண்டிய சூழ்நிலை இருக்கலாம். அப்படிப்பட்ட திட்டங்கள்தான் நிலுவையில் இருக்கின்றனவேயொழிய மற்ற திட்டங்கள் எல்லாம் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, நீங்கள் எள்ளளவும் சந்தேகப்பட வேண்டிய அவசியமே இல்லை. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட அனைத்து அறிவிப்புகளும் நிறைவேற்றப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் அறிவிக்கப்பட்ட அனைத்துத் திட்டங்களும் நிறைவேற்றப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், அதன்மேல் விவாதம் ஒன்றும் வேண்டாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே நிறைவேற்றப்படும் என்று தெரிவித்துவிட்டார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றப்படும் என்று உறுதிமொழி அளித்தபிறகு அதற்குமேல் அதில் என்ன விவாதம் இருக்கிறது? (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், வேறு பொருள் குறித்து பேசுங்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவிக்கப்படும் திட்டங்களை அரசு உறுதிமொழிக் குழுவிற்கு அனுப்பி வையுங்கள் என்றுதான் நாங்கள் கேட்கிறோம். நீங்கள் திட்டங்களை நிறைவேற்றினீர்களா அல்லது நிறைவேற்றவில்லையா என்ற பிரச்சினைக்குள் நான் போகவில்லை. அரசு உறுதிமொழிக் குழுவிற்கு அனுப்பி வையுங்கள் என்ற கோரிக்கையைத்தான் நான் அவைமுன் எடுத்து வைத்திருக்கிறேன்.

7. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. கரி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016–2018 ஆம் ஆண்டுகளுக்கான பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தொன்றாவது முதல் இருபத்தி நான்காவது வரையிலான 4 அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கின்றேன்.

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ராஜா, அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. சி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். மாண்புமிகு அம்மா அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.